Vlambaram - December 01, 2024 _Vlambaram-Front 2024-11-30 4:18 PM Page 1

கனடாவின் மூத்த தமிழ் இதழ் விளம்பரம்™ • VLAMBARAM™ Canada's Oldest Tamil Newspaper




34ஆவது ஆண்டில்
Tel: 416-282-8059

# விளம்பரம்

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

email: vlambaram@sympatico.ca www.vlambaram.com




நிதி: 34 பாலம்: 23 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் DECEMBER 01, 2024

# இலங்கையைத் தூய்மையாக்குவோம்!

“அரசின் பிரதான திட்டமாக இலங்கையைத் தூய்மையாக்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம். குறிப்பாக ‘தூய்மையான இலங்கை’ என்பது சுற்றுச்சூழலில் ஏற்படும் தூய்மையை மட்டும் குறிக்கவில்லை. அரசியல் அதிகாரத்தில் சாதகமான மாற்றங்களைக் கொண்டு வருதலையும் சேர்த்துக் குறிக்கிறது.

அரசாங்க அதிகாரிகள் அமைப்பில் அரசு நல்ல மாற்றங்களைச் செய்யலாம். ஆனால் ஒரு நல்ல அரசைக் கட்டியெழுப்புவதற்கு மக்களிலும் நல்ல மாற்றம் ஏற்படவேண்டும். மக்களில் ஒரு நல்ல மாற்றம் இல்லாமல் மேலே இருக்கும் அரசியல் அதிகாரத்தை மாற்றுவதால் மாத்திரம் இலக்குகளை அடைந்து கொள்ள முடியாது. அதனால் நல்ல குடிமக்கள், நல்ல மனப்பான்மை, நல்ல செயற்பாடுகள் மற்றும் நல்ல நடத்தை கொண்ட மக்களை உருவாக்க வேண்டும். இதுவே ‘தூய்மையான இலங்கை’ என்னும் வேலைத்திட்டத்தின் நோக்கமாகும்” என்று இலங்கை அதிபர் அநுர குமார திஸாநாயக்க இலங்கையின் பத்தாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அதிபர் திஸாநாயக்க கையில் சிங்கள மொழியில் அவரது உரையின் பிரதி ஒன்றை வைத்திருந்தாலும், அதைப் பாவிக்காமலும் எவ்வித தொழில்நுட்ப உதவியுமின்றி (No Teleprompter) மனனம் செய்தவர்போல் சரளமாகவும், தெளிவாகவும் தனது 50 நிமிட முதலாவது கொள்கை அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

2024 நொவெம்பர் 14ஆம் திகதி நடந்து முடிந்த இலங்கை நாடாளுமன்றத்திற்கான தேர்தலில் இலங்கை அதிபர் அநுர குமார திஸாநாயக்க தலைமை வகித்த தேசிய மக்கள் சக்தி (NPP) நாடாளுமன்றத்தில் உள்ள 225 ஆசனங்களில் 159 (70.7%) ஆசனங்களைப் பெற்று மூன்றில் இரண்டு பங்குக்கு மேற்பட்ட பெரும்பான்மையுடன் அரசை அமைக்கிறது.

1977ஆம் ஆண்டில் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் ஐக்கிய தேசியக்கட்சி ஆறில் ஐந்து பங்கு (83%) பெரும்பான்மையைப் பெற்று நாடாளுமன்றம் சென்றது. அப்போது தற்போதைய விகிதாசாரத் தேர்தல் முறை இல்லை. விகிதாசார தேர்தல் முறையில் தனி ஒரு கட்சி மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெறுதல் இலகுவான காரியமல்ல. 47 வருடங்களுக்குப் பின்னர் விகிதாசாரத் தேர்தல் முறையில் தனி ஒரு கட்சியாக மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை நாடாளுமன்றத்தில் பெற்று மற்றும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அதிபரையும் பெற்று ‘தேசிய மக்கள் சக்தி’ இலங்கை வரலாற்றில் சாதனை படைத்துள்ளது.


New Cabinet of ministers Thanks: The Island

நாடாளுமன்றத் தேர்தலில் அமோக வெற்றியீட்டிய பின்னர் இலங்கை அதிபர் அநுர குமார திஸாநாயக்க 2024 நொவெம்பர் 18ஆம் திகதி 22பேர் கொண்ட தனது மந்திரிசபையை அறிவித்தார்.

பாதுகாப்பு, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி, டிஜிட்டல் பொருளாதாரம் ஆகிய நான்கு அமைச்சுகளுக்கும் பொறுப்பாக இலங்கை அதிபர் அநுர குமார திஸாநாயக்க இருப்பார்.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆகிய இரண்டு அமைச்சுகளுக்கும் பொறுப்பாக இலங்கைப் பிரதமர் டாக்டர். ஹரிணி அமரசூரிய இருப்பார்.

பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்துறை அமைச்சராக சரோஜினி போல்ராஜ் பதவியேற்றார்.

மீன்பிடி, நீரியல் மற்றும் பெருங்கடல் வளத்துறை அமைச்சராக இராமலிங்கம் சந்திரசேகர் பதவியேற்றுள்ளார். இவர்களைத் தவிர ஐந்து பேராசிரியர்கள், வைத்தியர்கள் மற்றும் பொறியியலாளர்கள் மந்திரிசபையில் இருக்கின்றனர்.

அதிபர் தேர்தலில் 2024 செப்ரெம்பர் 21 ஆம் திகதி முதற்சுற்று வாக்கெடுப்பில் 42.31% (5,634,915) வாக்குகளைப் பெற்ற தேசிய மக்கள் கட்சி 2024 நொவெம்பர் 14இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 61.56% (6,863,186) வாக்குகளைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த 7 வார கால இடைவெளியில் தேசிய மக்கள் கட்சி 11% (1,228,271) அதிகப்படியான வாக்குகளைப் பெற்றுள்ளது. இதற்கு அவர்கள் முன்வைத்த பிரதான கோரிக்கைகளான ஆட்சி முறையில் மாற்றம் வேண்டும் (System Change), மரபுரீதியான அரசியல் கலாசாரத்தை மாற்ற வேண்டும், ஊழலற்ற பொறுப்புக் கூறும் அரசாங்கத்தினை உருவாக்க வேண்டும் போன்றவை மக்களால் பெரிதும் ஏற்றுக் கொள்ளப்பட்டது முக்கிய காரணமாகும்.

இலங்கையில் உள்ள 22 தேர்தல் மாவட்டங்களில் யாழ்ப்பாணம், வன்னி உட்பட 21 தேர்தல் மாவட்டங்களில் தேசிய மக்கள் கட்சி வெற்றி பெற்று அதிக ஆசனங்களைப் பெற்றது. மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்தில் மட்டுமே இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி வெற்றி பெற்று அதிக ஆசனங்களைப் பெற்றது.

நாடு முழுவதும் கட்சிகளுக்கு விழுந்த வாக்குகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் செல்லுபடியற்ற வாக்குகள் (5.65%) மூன்றாவது இடத்தில் இருப்பது கவனிக்கப்படவேண்டிய விடயம்.

இம்முறை நடைபெற்ற தேர்தல் பிரசாரங்களின்போதும், தேசிய மக்கள் கட்சியின் வெற்றியிலும் இனம், மதம், சாதி, மொழி மற்றும் பிரதேச வாதங்கள் செல்வாக்குப் பெறவில்லை என்பது முக்கிய விடயமாகும்.

95% இற்கு மேல் சிங்கள மக்கள் வாழும் மாத்தறை தேர்தல் மாவட்டத்தில் தேசிய

தொடர்ச்சி 05ஆம் பக்கம்















# NEW INDUSTRIAL / OFFICE BUILDING

***Mostly Anticipated New Project***

***in Scarborough***

on

## 2711 Markham Road

## @ Nashdene




*For further Info :*

**Please Call : 416 321 6969**

Raja Mahendran
Broker / Owner
raja@mahendran.ca

Gulshan Sharma
Broker
gksharmaca@gmail.com

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2

**Tel: 416-321-6969** * Independently owned and operated.



Available Till Midnight
Including Weekends & Holidays

# ANTON DHARMASEELAN

MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

## CALL ME FIRST
## FOR ALL YOUR MORTGAGE NEEDS

| | |
|---|---|
| PURCHASE | MAJOR BANKS |
| REFINANCE | ALTERNATIVE LENDERS |
| SELF EMPLOYED | B LENDERS |
| BAD CREDIT | CREDIT UNIONS |
| INVESTMENT PROPERTY | TRUST COMPANIES |
| RENEWAL | PRIVATE LENDERS |

# 416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE

Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# அதிக பலத்துடன் அமைந்துள்ள ஆட்சி

**– அரவின் –**

இலங்கையில் நடந்த நாடாளுமன்றத் தேர்தல், வரலாற்று ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகப் பார்க்கப்படுகிறது.

ஏனென்றால், இந்தத் தேர்தலில், இதற்கு முன் எப்போதும் ஆட்சிக்கு வந்திராத ஒரு கட்சி, அதிகாரத்திற்கு வந்திருக்கிறது.

இதுவரை காலமும் ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திர கட்சி (பொது ஜன பெரமுன) ஆகிய இரண்டு கட்சிகளையும் சேர்ந்தோர்தான், மாறி மாறி அரசாங்கத்தை அமைத்து வந்திருந்தனர்.

அதனைமீறி, மூன்றாவது சக்தியாக இருந்துவந்த ஜேவிபியின், இப்போதைய வடிவமான தேசிய மக்கள் சக்தி, இந்த முறை அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கிறது.

கடந்த நாடாளுமன்றத்தில் மூன்று ஆசனங்களுடன் இருந்த அந்தக் கட்சி, இம்முறை 159 ஆசனங்களுடன் பலம் வாய்ந்த அரசாங்கத்தை அமைத்திருக்கிறது.

இலங்கையின் வரலாற்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்த சந்தர்ப்பங்கள் இருந்தாலும், விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறை நடைமுறைக்கு வந்த பின்னர், எந்த ஒரு கட்சியாலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை பெற்றுக் கொள்ளக் கூடிய நிலை இருந்திருக்கவில்லை.

ரணசிங்க பிரேமதாச, சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ கோட்டாபய ராஜபக்ஷ போன்ற ஜனவசியம்மிக்க, பலம்வாய்ந்த அரசியல் தலைமைகளின் கீழ் இருந்தபோதுகூட, மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை பெறக்கூடிய சாத்தியம் இருக்கவில்லை.

மஹிந்த ராஜபக்ஷவும் கோட்டாபய ராஜபக்ஷவும் தேர்தலுக்குப் பின்னரே, பிற கட்சிகளின் ஆதரவைப் பெற்றுக்கொண்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை உறுதி செய்தனர்.

ஆனால், தேசிய மக்கள் சக்திக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு தேவையான ஆசனங்களை விடவும் அதிகமான ஆசனங்களை, வாக்காளர்கள் அள்ளிக் கொடுத்திருப்பது, அரசியல் நோக்கர்கள் மத்தியில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கிறது.



இப்படி ஒரு பெரும்பான்மை பலத்துடன், தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வரும் என்று யாருமே கனவுகூடக் கண்டதில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் அந்தக் கட்சி பெற்றுக்கொண்ட வாக்குகளின் அடிப்படையில், அறுதிப் பெரும்பான்மைக்கு சற்று முன் அல்லது பின் ஆசனங்களைப் பெறக்கூடிய நிலையில்தான் அந்தக் கட்சி இருப்பதாக கணிக்கப்பட்டது.

இந்தத் தேர்தல் நடப்பதற்கு, இரண்டு வாரங்களுக்கு முன்னதாக காலி மாவட்டம் எல்பிட்டிய பிரதேச சபைக்கு நடத்தப்பட்ட தேர்தலில்கூட, இப்படி ஓர் அலை வீசப் போகிறது என்பதற்கான எந்த அசுமாற்றமும் இருக்கவில்லை.

திடீரென, அடித்த சுனாமிபோல, தேசிய மக்கள் சக்தி பெரும்பாலான நாடாளுமன்ற ஆசனங்களை அள்ளிக்கொண்டு போய்விட்டது.

தேசிய மக்கள் சக்தியின் சார்பில், நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட 159 பேரில் 9 பேர் மாத்திரமே இதற்கு முன்னர் நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த அனுபவமான அரசியல்வாதிகள். ஏனைய 150 பேருமே அந்தக் கட்சியில் புதிதாக முளைத்தவர்கள்.

இந்தமுறை நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட 225 பேரில் 172 பேர்வரை புதுமுகங்கள்.

கடந்த நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த எல்லோருமே ஏமாற்றுக்காரர்களென தேசிய மக்கள் சக்தி குற்றம்சாட்டி வந்தது.

அவர்களில், இப்போதைய ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவும் இப்போதைய வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தும், இப்போதைய பிரதமர் ஹரிணி அமரசூரியவும்கூட அடங்கி இருந்தனர். ஏனென்றால் அவர்களும் அந்த நாடாளுமன்றத்தில் இருந்தனர்.

நாடாளுமன்றத்தைச் சுத்தப்படுத்துவோம் என, தேசிய மக்கள் சக்தி பிரச்சாரம் செய்து 172 புதுமுகங்களை நாடாளுமன்றத்திற்குக் கொண்டு வந்திருக்கிறது.

கடந்த முறை நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்தவர்களில் பலர் அரசியலில் இருந்து விலகிச் சென்று விட்டனர்.

கோட்டாபய ராஜபக்ஷவின் வீழ்ச்சியைத் தொடர்ந்து பொதுஜன பெரமுனவின் அமைச்சர்கள், அரசியல்வாதிகள் பலர் தாங்களாகவே போட்டியில் இருந்து ஒதுங்கி கொண்டனர்.

அப்படி ஒதுங்கிக் கொண்டவர்களில் ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த, சமல் ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ போன்றோரும் அடங்கியிருந்தனர்.

நாமல் ராஜபக்ஷ தந்திரமாக தேசியப் பட்டியலில் இடம்பெற்று கட்சிக்குக் கிடைத்த ஒரே ஆசனத்தைத் தனதாக்கிக் கொண்டிருக்கிறார்.

ஷசீந்திர ராஜபக்ஷ, மொனராகலயில் போட்டியிட்டு தோல்வியடைந்திருக்கிறார்.

அதேபோல பொதுஜன பெரமுன அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருந்தோர், நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தோர் மாத்திரமன்றி, பல்வேறு அரசியல் கட்சிகளினதும் பிரமுகர்கள்கூட, இந்த முறை தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்கினர்.

வெற்றி வாய்ப்பு கிடைக்காது என்பதால் தான், அவர்கள் போட்டியில் இருந்து ஒதுங்கும் நிலை ஏற்பட்டது.

அப்படி இருந்தும் சிலிண்டர் கூட்டணியில் போட்டியிட்ட முன்னாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானோர் இந்தத் தேர்தலில் மண் கவ்வி இருக்கின்றனர்.

இதனால் பெரும் எண்ணிக்கையான மூத்த அரசியல்வாதிகள் கட்சி அரசியலிலிருந்து மாத்திரமன்றி, ஒட்டுமொத்த அரசியல் செயற்பாடுகளில் இருந்தும் விலகிக் கொண்டிருக்கின்றனர். அவர்களைப் பட்டியலிடப் போனால் மிகமிக நீளமானது.

இதனால்தான், இம்முறை நாடாளுமன்றம் முகம் தெரியாத அரசியல்வாதிகள் பலரால் நிரம்பிப் போய் இருக்கிறது.

அவர்களை அடையாளம் கண்டு கொள்வதும் அறிமுகம் செய்து கொள்வதும்கூட சிக்கலானதுதான்.

ஏனென்றால் அந்த அளவுக்கு இலங்கையின் புதிய நாடாளுமன்றம் அறிமுக அரசியல்வாதிகளால் நிரம்பி இருக்கிறது.

இது முழு நாட்டுக்குமான சூழல்தான். தமிழ் அரசியல் பரப்பிலும் இதுதான் நடந்திருக்கிறது. பலர் காணாமல் போய் இருக்கின்றனர். பலர் புதிதாக உள்ளே வந்திருக்கின்றனர்.

இந்த நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்க் கட்சிகள் பலமிழந்து போய் இருப்பது, ஆளும் கட்சிக்கு பதற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

ஏனென்றால் இதற்கு முன்னர் ஆட்சியில் இருந்த கோட்டாபய ராஜபக்ஷவிற்குக் கூட மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருந்தது.

ஆனால் அவரால் ஆட்சியை இரண்டரை ஆண்டுகளுக்குக்கூட முழுமையாக நடத்தி முடிக்க முடியவில்லை. அதற்குள் மக்கள் புரட்சி வெடித்து அவர் நாட்டைவிட்டு ஓடுகின்ற நிலை ஏற்பட்டது.

அந்தப் போராட்டத்திற்கு பின்னால், ஜேவிபியின் பங்கு கணிசமானதாக இருந்தது. அப்படிப்பட்ட ஜேவிபிக்கு, தமக்கு எதிராகவும் அதே ஆயுதம் பிரயோகிக்கப்படும் வாய்ப்பு இருப்பதை உணர்ந்து கொள்வது கடினமானதல்ல.

அதனால், இந்தப் பெரும்பான்மை பலத்தை அவர்கள் எச்சரிக்கையோடு அணுகுவார்கள் என்ற நிலை காணப்படுகிறது.

எது எவ்வாறாயினும் தேசிய மக்கள் சக்திக்கு இந்தத் தேர்தலில் கிடைத்திருக்கின்ற பெரும் பலம், நிலையான அமைதியை ஏற்படுத்தவும் வளமான பொருளாதாரத்தை உருவாக்கவும் அந்தக் கட்சிக்கு கிடைத்துள்ள வரம் என்றே கூறலாம்.

ஆனால், அதனைப் பயன்படுத்தக்கூடிய திறனும் விருப்பமும் அனுர குமார திசாநாயக்கவுக்கும், அவரது அரசாங்கத்திற்கும் தேவை. அது இல்லாமல் அவர்களால் வெற்றிகரமான அரசாங்கத்தை நடத்திச் செல்லவோ அல்லது நாட்டை ஒரு சொர்க்கபூமியாக மாற்றவோ முடியாது.

இதற்கு முன்பிருந்த ஆட்சியாளர்கள் சிக்கலான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமாறு அழுத்தம் கொடுத்த போதெல்லாம், தங்களிடம் நாடாளுமன்றத்தில் பலமில்லை, மூன்றில் இரண்டு ஆசனங்கள் இல்லையென்று சாட்டுப் போக்கு சொல்லிவந்த நிலையே காணப்பட்டது. இப்போது அப்படியான எந்தத் தடையோ தடங்கலோ கிடையாது.

அனுர குமார திசாநாயக்க கண்ணைக் காட்டினால் கையைத் தூக்குவதற்கு மூன்றில் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாராக இருக்கின்றனர். ஆனாலும் என்ன, அதற்கான சமிக்ஞையைக் காட்டுவதற்கு அரசாங்கம் தயாராக இருக்க வேண்டும்.

240 பக்கத் தேர்தல் விஞ்ஞாபனத்தில், ஏராளம் வாக்குறுதிகளைக் கொடுத்தே இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தது.

அவற்றையெல்லாம் நிறைவேற்றுவதற்குப் போதுமான அதிகார பலம் மக்களால் கொடுக்கப்பட்டிருக்கிறது.

விளம்பரம்
VLAMBARAM™
34ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலகப் பொறுப்பாளர்: சுதர்சினி D.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave.E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL- 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# இலங்கையைத்.....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

மக்கள் கட்சி தமிழ் வேட்பாளராக சரோஜினி சாவித்திரி போல்ராஜ் மற்றும் முஸ்லீம் வேட்பாளராக பொறியியலாளர் அக்ரம் இலியனாஸ் ஆகியோரை நிறுத்தியது. இவர்கள் இருவருமே மக்களின் விருப்பு வாக்குகளாக முறையே 148,379 மற்றும் 53,835 வாக்குகள் பெற்று நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவாகினர்.



President Anura Kumara Dissanayake Thanks: the Sunday Times



Sarojani Savithri Paulraj, Minister of Women and Child Affairs Thanks:Tamil Guardian



இரத்தினபுரி தேர்தல் மாவட்டத்திலும் தேசிய மக்கள் கட்சியில் தமிழ் வேட்பாளர் சுந்தரலிங்கம் பிரதீப் 112,711 விருப்பு வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத் திற்குத் தெரிவாகியுள்ளார். இரத்தினபுரி தேர்தல் மாவட்டத்தில் கணிசமான அளவு தமிழ் மக்கள் வாழ்ந்தாலும், அவர் களுக்குக் கடந்த மூன்று தசாப்தகாலமாக ஒரு தமிழ்ப் பிரதிநிதி நாடாளுமன்றத்தில் இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதேபோல் குறிப்பிடத்தக்க அளவு முஸ்லீம் மக்கள் வாழும் கம்பஹா மற்றும் குருநாகல் தேர்தல் மாவட்டங்களில் அவர்களுக்குப் பலகாலமாக முஸ்லீம் பிரதிநிதி நாடாளுமன்றத்தில் இருக்க வில்லை. தற்போது தேசிய மக்கள் கட்சியின் மூலம் இவ்விரு தேர்தல் மாவட்டங்களிலும் முஸ்லீம் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகியுள்ளனர். கம்பஹா தேர்தல் மாவட்டத்தில் இருந்து 716,715 விருப்பு வாக்குகள் பெற்றுத் தெரிவான விஜித ஹேரத் என்பவரே இலங்கையின் விகிதாசாரத் தேர்தல் வரலாற்றில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றவராகும். கொழும்புத் தேர்தல் மாவட்டத்தில் இருந்து 655,289 விருப்பு வாக்குகளைப் பெற்று தெரிவான ஹரிணி அமரசூரிய இரண்டாவது அதிகப்படியான விருப்பு வாக்குகளைப் பெற்றவராகும். இவர்கள் இருவருக்கும் முன்னர் அதிகப்படியான விருப்பு வாக்குகளைப் பெற்றவர் மஹிந்த ராஜபக்ஷ ஆவார். இவர் 2020ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 527,364 விருப்புவாக்குகள் பெற்றிருந்தார். அதற்கு முன்னர் ரணில் விக்ரமசிங்க 2015ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 500,566 விருப்பு வாக்குகள் பெற்றிருந்தார்.



The President walks into the chamber Thanks: The Sunday Times

## 2024 நொவெம்பர் 14ஆம் திகதி நடைபெற்ற இலங்கை நாடாளுமன்றத்திற்கான தேர்தல் முடிவுகள்

| கட்சி | வாக்குகள் | வீதம் (%) | ஆசனங்கள் | தேசியப் பட்டியல் | மொத்த ஆசனங்கள் |
|---|---|---|---|---|---|
| தேசிய மக்கள் கட்சி (NPP) | 6,863,186 | 61.56 | 141 | 18 | 159 |
| ஐக்கிய மக்கள் கட்சி (SJB) | 1,968,716 | 17.66 | 35 | 5 | 40 |
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (ITAK) | 257,813 | 2.31 | 7 | 1 | 8 |
| புதிய ஜனநாயக முன்னணி (NDF) | 500,835 | 4.49 | 3 | 2 | 5 |
| சிறீலங்கா பொதுஜன பெரமுன (SLPP) | 350,429 | 3.14 | 2 | 1 | 3 |
| சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (SLMC) | 87,038 | 0.78 | 2 | 1 | 3 |
| சர்வஜன பாலய (SB) | 178,006 | 1.60 | 0 | 1 | 1 |
| ஐக்கிய தேசியக்கட்சி (UNP) | 66,234 | 0.59 | 1 | 0 | 1 |
| ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டமைப்பு (DTNA) | 65,382 | 0.59 | 1 | 0 | 1 |
| அகில இலங்கைத்தமிழ் காங்கிரஸ் (ACTC) | 39,894 | 0.36 | 1 | 0 | 1 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் (ACMC) | 33,911 | 0.30 | 1 | 0 | 1 |
| யாழ்ப்பாணம்-சுயேட்சைக் குழு - 17 (IND-17) | 27,855 | 0.25 | 1 | 0 | 1 |
| சிறீலங்கா தொழிலாளர் கட்சி (SLLP) | 17,710 | 0.16 | 1 | 0 | 1 |
| மொத்தம் | | | **196** | **29** | **225** |

| | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மொத்தமாக வாக்களிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகள் | 11,148,006 | 94.35% |
| செல்லுபடியற்ற வாக்குகள் | 667,240 | 5.65% |
| மொத்தமாக வாக்களிக்கப்பட்ட வாக்குகள் | 11,815,246 | 68.93% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 17,140,354 | |

## வடக்கு - கிழக்கு தேர்தல் மாவட்ட முடிவுகள்

### யாழ்ப்பாணம்

| கட்சி | கட்சி பெற்ற வாக்குகள் | வேட்பாளர் பெற்ற விருப்பு வாக்குகள் |
|---|---|---|
| தேசிய மக்கள் கட்சி (NPP) | 80,830 | |
| இளங்குமரன் கருணநாதன் | | 32,102 |
| ஸ்ரீபவ நடராஜா சண்முகநாதன் | | 20,430 |
| ராஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி | | 17,000 |
| இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி (ITAK) | 63,327 | |
| சிவஞானம் சிறீதரன் | | 32,833 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (ACTC) | 27,986 | |
| கஜேந்திரகுமார் பொன்னம்பலம் | | 15,135 |
| சுயேட்சைக்குழு 17 | 27,855 | |
| ராமநாதன் அர்ச்சுனா | | 20,487 |

### வன்னி

| கட்சி | கட்சி பெற்ற வாக்குகள் | வேட்பாளர் பெற்ற விருப்பு வாக்குகள் |
|---|---|---|
| தேசிய மக்கள் கட்சி (NPP) | 39,894 | |
| செல்வத்தம்பி திலகநாதன் | | 10,652 |
| ஆறுமுகம் ஜெகதீஸ்வரன் | | 9,280 |
| ஐக்கிய மக்கள் கட்சி (SJB) | 32,232 | |
| ரிஷாத் பதியுதீன் | | 21,018 |
| இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி (ITAK) | 29,711 | |
| துரைராசா ரவிக்குமார் | | 11,215 |
| ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு(DTNA) | 21,102 | |
| ஏ. அடைக்கலநாதன் | | 5,695 |
| சிறீலங்கா தொழிலாளர் கட்சி(SLLP) | 17,710 | |
| காதர் மஸ்தான் | | 13,511 |

### திருகோணமலை

| கட்சி | கட்சி பெற்ற வாக்குகள் | வேட்பாளர் பெற்ற விருப்பு வாக்குகள் |
|---|---|---|
| தேசிய மக்கள் கட்சி (NPP) | 87,031 | |
| அருண் ஹேமச்சந்திர | | 38,368 |
| ரொஷான் அக்மீமன் | | 25,814 |
| ஐக்கிய மக்கள் கட்சி (SJB) | 53,058 | |
| இம்ரான் மஹரூப் | | 22,779 |
| இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி (ITAK) | 34,168 | |
| சண்முகம் குகதாசன் | | 18,470 |

### மட்டக்களப்பு

| கட்சி | கட்சி பெற்ற வாக்குகள் | வேட்பாளர் பெற்ற விருப்பு வாக்குகள் |
|---|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி (ITAK) | 96,975 | |
| சாணக்கியன் இராச மாணிக்கம் | | 65,458 |
| ஜி. ஸ்ரீநேசன் | | 22,773 |
| இளையதம்பி ஸ்ரீநாத் | | 21,202 |
| தேசிய மக்கள் கட்சி (NPP) | 55,498 | |
| கே. பிரபு | | 14,856 |
| சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் (SLMC) | 40,139 | |
| ஏ.எம். ஹிஸ்புல்லா | | 32,410 |

### திகாமடுல்ல

| கட்சி | கட்சி பெற்ற வாக்குகள் | வேட்பாளர் பெற்ற விருப்பு வாக்குகள் |
|---|---|---|
| தேசிய மக்கள் கட்சி (NPP) | 146,313 | |
| வசந்த பியதிஸ்ஸ | | 71,120 |
| மஞ்சுளா ரத்நாயக்க | | 50,838 |
| பிரியந்த விஜேரத்ன | | 41,313 |
| முத்துமெனிகே ரத்வத்த | | 32,145 |
| சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் (SLMC) | 46,899 | |
| மீராசாஹிபு உதுமாலெப்பே | | 13,016 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் (ACMC) | 33,911 | |
| எம்.எம். தாஹிர் | | 14,511 |
| இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி (ITAK) | 33,632 | |
| கவீந்திரன் கோடீஸ்வரன் | | 11,962 |



இலங்கை தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன்

இலங்கைத் தமிழ் அரசுக்கட்சிக்கு தேசியப்பட்டியலிலிருந்து ஓர் உறுப்பினர் பதவி கிடைத்தது. அதற்கு தமிழ் அரசுக்கட்சியின் பொதுச் செயலாளராகப் பதவி வகிக்கும் Dr. P. சத்தியலிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் வன்னி தேர்தல் மாவட்டத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளராக இருந்தவர்.

# தமிழ்த் தலைமைகளுக்கு ஒரு பாடம்

**– முகிலன் –**

இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் யாரும் எதிர்பார்க்காத பல விளைவுகள் நிகழ்ந்திருக்கின்றன.

அவற்றில் ஒன்று, தமிழரின் தாயகமான வடக்கு, கிழக்கில், மிகவும் முக்கியமாக வடக்கில் தமிழ்த் தேசியக் கட்சிகளைத் தூக்கி எறிந்துவிட்டு, சிங்கள தேசியக் கட்சிகளில் ஒன்றான, தேசிய மக்கள் சக்தி அதிக ஆசனங்களையும் வாக்குகளையும் பெற்றிருப்பதுதான்.

தமிழ்க் கட்சிகள் மத்தியில் கடந்த பல ஆண்டுகளாக இருந்து வந்த பிளவுகளும் பிரச்சினைகளும் இப்படி ஒரு நிலைக்குக் கொண்டுவந்து விடும் என்பது, யாராலும் எதிர்வு கூறப்படாத ஒன்று அல்ல.

தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு ஒரு பெரும் பின்னடைவு ஏற்படப் போகிறது என்பது தெளிவாகத் தெரிந்தது. ஆனால் அதைவிட மோசமான நிலையை, தமிழ்க் கட்சிகள் அடைந்து இருப்பதுதான் கவலைக்குரிய விடயம்.

இலங்கை சுதந்திரம் பெற்றதில் இருந்து வடக்குக் கிழக்கு மாகாணங்களில் பெரும்பாலான ஆசனங்களைக் கைப்பற்றி வந்தது தமிழ் தேசியக் கட்சிகள்தான்.

அம்பாறையில் ஒற்றை ஆசனத்தைக்கூட பெறுவதற்குப் போராடுகின்ற நிலை ஏற்பட்டிருந்தது.

திருகோணமலை மாவட்டத்திலும், இனப் பரம்பல் மாற்றி அமைக்கப்பட்டு விட்டதால், தமிழரின் பிரதிநிதித்துவம் கேள்விக்கு உள்ளாகி வந்தது.

ஆயினும், வடக்குக் கிழக்கின் ஏனைய பகுதிகளில் தமிழ்த் தேசியக் கட்சிகள்தான் பெரும்பாலும் ஆசனங்களையும் வாக்குகளையும் பெற்றுக் கொள்வது வரலாறு.

அந்த வரலாற்றை தேசிய மக்கள் சக்தியின் திடீர் எழுச்சி மாற்றியிருக்கிறது.

ஒட்டுமொத்த இலங்கையையும் கைப்பற்றி விட்டோம் என மார் தட்டும் வாய்ப்பை, மட்டக்களப்பு மாவட்டம் அந்தக் கட்சிக்கு விட்டுக் கொடுக்கவில்லை.

மட்டக்களப்பு தவிர்ந்த மற்ற எல்லா மாவட்டங்களிலும் தேசிய மக்கள் சக்தி அதிகளவு வாக்குகளையும் ஆசனங்களையும் அள்ளிக்கொண்டு போனது.

அதைவிடப் தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ்த் தேசிய மக்கள் சக்தி பெற்றுக்கொண்ட ஆசனங்கள்தான் குறிப்பிடத்தக்கது.



யாழ்ப்பாணத்தில் மூன்று ஆசனங்களைக் கைப்பற்றி இருக்கிறது. வன்னியில் இரண்டு ஆசனங்களையும் திருகோணமலையில் இரண்டு ஆசனங்களையும், மட்டக்களப்பில் ஓர் ஆசனத்தையும், அம்பாறையில் நான்கு ஆசனங்களையும் என மொத்தம் 12 ஆசனங்களை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றிவிட்ட நிலையில், எஞ்சிய ஆசனங்களுக்காகத்தான் தமிழ்த் தேசியக் கட்சிகள் தமக்குள் மோதிக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

அதில் தமிழரசுக் கட்சி எட்டு ஆசனங்களைக் கைப்பற்ற ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஓர் ஆசனத்தையும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஓர் ஆசனத்தையும் பெற்றுக்கொண்டு இருக்கின்றன.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறைமையில், தேசிய மக்கள் சக்தி அலைக்கும் மத்தியில் சுயேட்சைக் குழு ஒன்று ஓர் ஆசனத்தைத் தட்டிச் சென்ற வரலாற்று நிகழ்வும் யாழ்ப்பாணத்தில் நடந்திருக்கிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மொத்தம் உள்ள ஆறு ஆசனங்களில் பாதி, தேசிய மக்கள் சக்தி பெற்றுக் கொண்டது. இதனால் தமிழரசுக் கட்சியும் தமிழ் காங்கிரசும் சுயேட்சைக் குழுவும் தலா ஒவ்வொன்றுடன் ஒதுங்கிக் கொள்ள வேண்டிய நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது.

இக்கட்டத்தில் தமிழ்த் தேசிய அரசியலின் மானத்தைக் காப்பாற்றி இருப்பது மட்டக்களப்பு மாவட்டம்தான்.

யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் தேசிய மக்கள் சக்தி பெற்றுக்கொண்ட ஆசனங்களுக்கு அடிப்படைக் காரணம், தமிழ்க் கட்சிகளின் பலவீனங்கள்தான்.

தமிழ்த் தேசிய கட்சிகள் தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, தமிழ் மக்கள் கூட்டணி என நான்கு கட்சிகளாகவும், ஊசி, பசு, கரும்பலகை, தண்ணீர்க் குழாய், மாம்பழம், லாந்தர் எனப் பல சுயேச்சைக் குழுக்களாகவும் பிரிந்து நின்றது தேசிய மக்கள் சக்திக்கு மிகவும் வசதியாகப் போய்விட்டது.

தமிழ்த் தேசியக் கட்சிகளுக்குக் கிடைத்த வாக்குகள் சிதறுண்டு போனதால், தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறும் நிலை ஏற்பட்டது.

இந்த அலையில் சிக்கி காணாமல் போன முக்கியமான தரப்புகள் இரண்டு.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான டக்ளஸ் தேவானந்தாவும் அங்கஜன் இராமநாதனும்தான் அவர்கள்.

சலுகை அரசியலின் ஊடாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் நீண்ட காலம் தங்களை மிக வலுவாகக் கட்டி அமைத்துக் கொண்டவர்கள் அவர்கள்.

ஆனால் தேசிய மக்கள் சக்தி அலைக்குள் அகப்பட்ட அவர்களின் பெரும்பாலான ஆதரவாளர்கள், அப்படியே திசை மாறி திசைகாட்டி பக்கம் சென்று விட்டனர்.

வாக்குகளின் போக்கை கணித ரீதியாகப் பார்க்கும்போது, கடந்த முறை அவர்களுக்குக் கிடைத்த வாக்குகள் அப்படியே தேசிய மக்கள் சக்திக்குச் சென்றிருப்பதைக் காண முடிகிறது.

அதுபோல இந்தத் தேர்தலில் தோல்வி அடைந்த முக்கியமான பலரில், சுமந்திரன், சித்தார்த்தன், சுரேஸ் பிரேமச்சந்திரன், கஜேந்திரன், கருணாகரன், ஆனந்தசங்கரி போன்றோரும் அடங்கியிருக்கின்றனர்.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கட்சிகளுக்குக் கிடைத்த வாக்குகளை ஒன்று கூட்டிப் பார்க்கின்றபோது, அவை சிதறடிக்கப்பட்டு இருக்கிறதே தவிர திசை மாறவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

ஆனாலும் இது ஒரு தோல்வி. அதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

ஏனென்றால், தமிழ் மக்களின் தமிழ்த் தேசிய வாக்குப் பாரம்பரியம் ஒன்று, இம்முறை உடைந்து விட்டது.

தமிழ்த் தேசியம் என்று கூறுவோரின் கணிப்புகள் எல்லாம் சிதறிப்போய் விட்டன. பிரதிநிதித்துவங்கள் இழக்கப்பட்டு விட்டன.

வாக்குகளைக் கூட்டி கையில் வைத்திருப்பதால் எதுவும் கிடைத்து விடாது.

எல்லாம் நடந்து முடிந்தபின் அந்தக் கணக்கைத் தூக்கி வைத்துக் கொண்டிருப்பது முட்டாள்தனம்.

புத்திசாலித்தனமாக நடந்து கொள்ளத் தெரியாததன் விளைவுதான் இது.

அப்படியானால் எது புத்திசாலித்தனம் என்று தீர்மானிக்க வேண்டிய நிலையில் தமிழ்க் கட்சிகள் இப்போது இருக்கின்றன.

இப்போதாவது அவர்கள் அதனைச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வரக்கூடிய நிலையில் இருக்கின்றனரா என்றால் அதுவும் நிச்சயமான ஒன்றாகத் தெரியவில்லை.

இத்தேர்தல் தமிழருக்கு ஒரு பாடத்தைக் கற்றுக் கொடுத்திருக்கிறது.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு எனவும், அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்றும் முதுமொழிகளை வைத்திருந்த இனம் தமிழ் இனம்.

அப்படிப்பட்ட தமிழர் இப்படி ஒரு பாடத்தைக் கேட்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டதே ஒற்றுமையில்லாததன் விளைவாகத்தான்.

இந்த ஒற்றுமை இல்லாத தன்மையை, சிங்கள அரசியல் கட்சிகளும் சிங்கள அரசியல் தலைமைகளும், தங்களுக்குச் சாதகமான சூழலை உருவாக்குவதற்குப் பயன்படுத்திக் கொண்டு இருக்கின்றன.

கடந்த கால வரலாறும் இதுதான், நிகழ்கால வரலாறும் இதுதான்.

இந்த முறை நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி தனது உறுப்பினர்களின் மூலம் தமிழரின் வாக்குகளைப் பெற்றுக்கொண்டதை வைத்துக்கொண்டு, தமிழர் விரும்பாத ஓர் அரசியலமைப்பைக் கொண்டுவந்து நிறைவேற்ற முனைப்பு காட்டும் என்ற அச்சம் தமிழ் தேசிய அரசியல் தலைமைகளிடம் உருவாகி இருக்கிறது.

இப்படி ஒரு சிக்கல் ஏற்பட்டதற்கு அவர்களே பொறுப்பாளிகள்.

இந்நிலையில் கூட அவர்கள் விழித்துக் கொள்ளத் தவறினால் இனிமேல், தமிழ் தேசிய அரசியல் தலைவர்கள் யாரும் தமக்குத் தேவையில்லை என்ற முடிவுக்கு தமிழ் மக்கள் தள்ளப்பட்டாலும் ஆச்சரியப்பட முடியாது.


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# தமிழரின் வாழ்விடங்களும், கல்வியும்



பேராசிரியர்
மா. சின்னத்தம்பி

## கடந்த இதழ் தொடர்ச்சி...

### 1.3 மலையகத் தமிழர் கல்வி

ஆங்கிலேயர் இலங்கையின் எல்லாப் பிரதேசங்களையும் 1815இல் கைப்பற்றுகின்றனர். 1823இல் மலைநாட்டின் புராதன சிங்கள மக்களது மலைநாட்டுக் கிராமிய நிலங்களைப் பறிக்கின்றனர். இந்தியாவில் நிலவிய வறட்சி, வறுமை, சாதிய ஒடுக்குமுறை என்பவற்றைச் சாதகமாகக் கவனத்தில் கொண்டு ஏராளமான தொழிலாளர்களைக் கூட்டம்கூட்டமாக கப்பலில் ஏற்றி, ஆங்கிலேயர் இலங்கைக்குக் கொண்டு வந்தனர். உலக சந்தைக்கு ஏற்றுமதி செய்வதற்காக கோப்பியும், பின் தேயிலையும் உற்பத்தி செய்யப்பட்டன. இப்போது 200 வருடங்கள் முடிவடைந்து விட்டன.

தொழிலாளர்களாக வந்தவர்களது வாக்குரிமை இலங்கை சுதந்திரமடைந்தவுடன் பறிக்கப்பட்டது. நாடற்றவர்களாயினர்; குடியுரிமையற்றவர்களாயினர்.

இவர்களுக்குரிய தேவைகளை நிறைவேற்றும் நோக்குடனும் பெருந்தோட்டங்களில் முதலீடு செய்யும் நோக்கத்தோடும் வணிகர்களும், முதலீடு செய்வோரும் மலைநாட்டுக்கு வரத் தொடங்கினர். இவர்கள் பின்பு கொழும்பு நகரத்துக்கும் இடம் பெயர்ந்து வாழத் தொடங்கினர்.

1985இல் திம்பு பேச்சுவார்த்தையோடு அனைவருக்கும் குடியுரிமை கிடைத்தது. தொழிற்சங்க ஒழுங்கமைப்பிலிருந்து அரசியல் கட்சிகள் பலவும் கட்டமைப்புச் செய்யப்பட்டன. பல அரசியல் தலைவர்கள் இவர்களிலிருந்து கொழும்பிலும், மலைநாட்டிலும் வளர்ச்சி பெற்றனர்.

1972ஆம் ஆண்டு முதலாம் இலக்கக் காணிச் சீர்திருத்தச் சட்டம் 1971இல் ஏற்பட்ட சிங்கள இளைஞர்களது ஆயுதப் போராட்டத்தின் கோபத்தைத் தணிப்பதற்காகக் கொண்டு வரப்பட்டது. இதில் மலையகத் தொழிலாளர் பாதிக்கப்பட்டனர். மலையகத்துக் குடும்பங்கள் 1972இலிருந்து வடக்கில் கிளிநொச்சி மாவட்டத்திற்கும், கிழக்கில் புனானை, வாகனேரி பகுதிகளுக்கும் புலம்பெயர்ந்தனர். அங்கு கல்வியறிவு குறைந்த விவசாயக் கூலிகளாக புதிய சமுதாய வடிவம் பெற்றனர்.

சிறிமாவோ - சாஸ்திரி ஒப்பந்தத்தின்கீழ் கணிசமான மக்கள் தமிழகத்து பெருந்தோட்டக் கூலிகளாகவும், அகதிகளாகவும் இடம்பெயர்ந்து வாழ்ந்தனர். பிரித்தானிய இந்தியாவில் கூலிகளாக இலங்கைக்கு வந்தவர்கள் சுதந்திர இந்தியாவிற்கு எந்த அங்கீகாரமுமற்ற அகதிகளாகத் தமது தாய்நாட்டிற்குச் சென்றனர்.

இத்தகைய அரசியல், சமூக வரலாறு கொண்ட இந்த மக்களது கல்வி தொடர்பாக பின்வரும் மாற்றங்கள் அல்லது வளர்ச்சி முக்கியமானது.

ஆங்கிலேயர் காலத்தில் தொழிலாளரது பிள்ளைகளுக்கான தோட்டப்புறப் பாடசாலைகள் பெயரளவிலேயே இயங்கின. தேயிலைத் தோட்டங்களில் பகல் பொழுதுகளில் விளையாடினால் தேயிலைக் கொழுந்துகளையே பிடுங்கி விளையாடுவர். இதனால் தோட்ட நிர்வாகத்திற்கு நட்டம் ஏற்படும். இதைத் தடுப்பதற்காக பிள்ளைகளைப் பராமரித்தால் மட்டும் போதுமானது; அதற்குரிய ஏற்பாடாகவே பாடசாலைகள் உருவாக்கப்பட்டன.



நன்றாகப் படித்து வேறு தொழில்களுக்கு தகைமை பெற்றால் தொழிலாளர் பற்றாக்குறை ஏற்பட்டுவிடும். கூலியை உயர்த்த வேண்டி வரும் என்று முதலாளிகளால் உணரப்பட்டது.

தோட்டங்களிலிருந்து வெளியேறுவதற்கு எதிரான தடைகளும் நீண்டகாலம் வலுவாக இருந்தன. குடியுரிமையும், நீண்ட காலம் வழங்கப்படவில்லை.

மலையகப் பாடசாலைகளும் நீண்ட காலமாக அரசுடைமையாக்கப்படவில்லை. அரச உதவிகள் உரியவாறு கல்வி கற்கக் கிடைக்கவில்லை.

இருநூறு ஆண்டுகள் முடிவடைந்துவிட்டன. குடியுரிமையும் வழங்கப்பட்டுள்ளது. நாளாந்தக் கூலித் தொழிலாளர்களுக்கு ரூபாய் 1700 வழங்குவதில் இன்றுவரை உடன்பாடு இல்லை. அதுபற்றி அரசியல் தலைவர்கள் நீண்டகாலமாக நிறையவே பேசுகின்றனர். வெற்றுக் கோசம் மட்டும்தான்.

பெருந்தோட்டத்துறையில் பணிபுரியும் எழுதுவினைஞர்கள், கங்காணிகள் மற்றும் வணிகர்களது பிள்ளைகள் கடந்த நான்கு தசாப்த காலத்தில் ஓரளவு கல்வி கற்று பட்டதாரிகளாகியுள்ளனர். அவர்களது பிள்ளைகளில் ஆண் பிள்ளைகள் வடபகுதியில் புகழ்பெற்ற இந்துக்கல்லூரி, மகாஜனா, யூனியன் கல்லூரிகளில், விடுதிகளில் தங்கியிருந்து படித்து பல்கலைக்கழகம் நுழைந்தனர். பல்கலைக்கழகங்களில் பேராசிரியர்களாகவும் உயர்ந்தனர். பேராசிரியர்கள் சோ. சந்திரசேகரம், எம். சின்னத்தம்பி போன்றோர் இவ்வாறு வளர்ந்தவர்களே.

பெண் பிள்ளைகளும் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, இராமநாதன் மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி விடுதிகளில் தங்கியிருந்து படித்து பட்டதாரிகளாயினர்.

யாழ்ப்பாணத்துப் பாடசாலைகள் அத்தகைய உயர் அந்தஸ்துடன் தொடர்ந்து இயங்கி வந்தன.

* பிற்காலத்தில் மலையகத்துப் பிரதேசங்களிலும் பல பாடசாலைகள் வளர்ச்சி பெற்றன; தரமான உயர் வகுப்புக் கல்வியை வழங்கின. வதுளை சரஸ்வதி வித்தியாசாலை, ஹைலண்ட் கல்லூரி போன்ற பல இத்தகைய வளர்ச்சியைப் பெற்றன.



* போதனைப் பல்கலைக்கழகத்திலும் திறந்த பல்கலைக்கழகத்திலும் பலர் உயர் பட்டங்களைப் பெற்றனர்.



தேசிய கல்வியியல் கல்லூரி ஒன்றும் மலையகத்தில் ஆசிரிய கல்வி நிறுவனமாக வளர்ந்தது. பலர் ஆசிரியர்களாகினர்.



தொண்டமான் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் ஒன்றும் திறன்விருத்திசார் கல்வி மற்றும் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகிறது. ஊவா வெலஸ்ஸ பல்கலைக்கழகம் புதிதாக பதுளையில் இயங்கி வருகின்றது. வடக்கில் யாழ்ப்பாணத் தமிழருக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழகம்போல மலையகத் தமிழருக்கு மலைநாட்டு பல்கலைக்கழகம் உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக வெறும் கோரிக்கையாகவே ஒலிக்கின்றது.

* இந்திய அரசின் கல்வி மேம்பாட்டு உதவித்திட்டங்கள் பலவும் அண்மைக் காலத்தில் ஓரளவு அதிகரித்து வருகிறது. கல்வி பற்றிய விழிப்புணர்வு அதிகரித்து வருகிறது.

* சிறுதொகையினரான மலையக இந்திய வம்சாவழித் தமிழர் கனடா, அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், மலேஷியா போன்ற நாடுகளுக்குப் புலம்பெயர்ந்துள்ளனர். குடியுரிமை பெற்றுள்ளனர். அவர்களது பிள்ளைகளும் உலகத் தரம் வாய்ந்த பல்கலைக்கழகங்களில் கற்று வைத்தியர்களாகவும், பொறியியலாளர்களாகவும் வளர்ந்து வருகின்றனர்.

இவர்களை மலையகத் தமிழர் என்பதா? இந்திய வம்சாவழித் தமிழர் என்பதா? என்ற கேள்வி பல மட்டங்களிலும் மேற்கிளம்பி நிற்கிறது. இவர்களை இந்தியர்களாகவே பார்க்கின்ற சிங்களத் தலைவர்கள் இப்போதும் உள்ளனர்.

“இந்தியாவில் - குறிப்பாக தமிழகத்தில் ஒரு சிறு துண்டினைப் பிய்த்து எடுத்து இலங்கையின் மத்திய மலைநாட்டில் ஒட்டி வைத்தாற்போல் இவர்கள் இன்றுவரை வாழ்கின்றனர்” என்கிறார் வரலாற்று ஆசிரியர் கே.எம்.டி. சில்வா.

இலங்கைத் தமிழர் மூன்று தசாப்த காலத்தில் கனடிய கலாசார, பொருளாதார, அரசியலில் கலந்ததுபோல மலையகத் தமிழர் மாற்றமடையவில்லை என்பது உண்மையே. இவர்களது வாழ்வில் திருமணம், பெண்கள் பற்றிய உணர்வு, பேச்சு மொழி, சிறு தெய்வ வழிபாடு, நாட்டுப்பாடல்கள் போன்ற பலவற்றிலும் இருநூறு ஆண்டுகளிலும் பெரிய மாறுதல்கள் எதுவுமே ஏற்படவில்லை.

வடக்கு-கிழக்கு தமிழ் அரசியல் தலைவர்கள் இவர்களையும் உள்ளடக்கிய அரசியல்பற்றி அவ்வப்போது பேசி வந்துள்ளனர். தொண்டைமான் போன்ற தலைவர்கள் “தங்கள் அரசியலைத் தனியாகத் தங்களிடம் விட்டுவிடும்படி” கூறியும் வந்துள்ளனர்.

தமிழ் இளைஞர் இயக்கங்கள் சிலவும், இடதுசாரிகள் சிலரும் தொழிலாளர் வர்க்கமாக அவர்களை நோக்கி தம்முடன் இணைக்க முயன்று வந்துள்ளனர்.

மலையகம் - கொழும்பு மாநகர் பிரதேச இந்தியத் தமிழர் மற்றும் அவர்கள்சார் அரசியல் தலைவர்களிடையேகூட சில வேறுபாடுகள் வலியுறுத்தப்பட்டும் வந்துள்ளன.

கொழும்பு நகரை மையப்படுத்திய வணிகத்துறை முதலாளிகள் கொழும்பிலும், திருச்சியிலும் வதிவிட வீடுகளை வைத்திருக்கும் கனவுகளோடுதான் வாழ்கின்றனர்.

ஆனால், மலையகத் தொழிலாளர் பற்றிய பார்வை, “இலங்கையில் இந்தியர்கள். இந்தியாவில் இவர்கள் இந்தியர்கள். புலம்பெயர்ந்து இந்தியா போனபோதும் இவர்கள் இலங்கை அகதிகள்தான்” என்றார் மலையகத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற பேராசிரியர் சோ. சந்திரசேகரம்.

எல்லோருக்கும் வாக்குரிமை கிடைத்துள்ள நிலைமைகளில் எதிர்காலத்தில் இவர்களது சமூக மதிப்பும், அரசியல் பலமும் அதிகரித்து வளரும் சமூகமாக வலிமை பெறவேண்டும்.

(தொடரும்)

## நாமும் நமது இல்லமும் 667

# ரொறொன்ரோ ஆதன முகவர்கள்



ராஜா மகேந்திரன்
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

பொதுவான நிலைப்பாட்டில் ஆதன முகவர்கள் என்ற சமுதாயம் ரொறொன்ரோ மற்றும் கனடா ரீதியில் மிகவும் முக்கியமானதாகக் காணப்படுகின்றது. இந்தத் தொழிலில் குறிப்பிட்ட காலத்திற்கு மேலாக இருப்பதனாலும் சொந்தமாக ஆதன முகவர் நிறுவனம் நடத்துவதாலும், முகவர்கள் பற்றிய பல விடயங்களை முதற்கண் காணக்கூடியதாக உள்ளது.

பொதுவாக ஆதன முகவர்கள் தமது வியாபாரப் பத்திரத்தைப் (Real Estate License) பெற்றால், இதனைத் தொடர்ந்து புதுப்பித்துக் கொண்டே இருப்பர்.

ஒவ்வொரு இரு வருடங்களிற்கும் எமது ஆதன வியாபார உரிமம் (Real Estae License) புதுப்பிக்கப்பட வேண்டும்.

ஒன்ராறியோவில் ஆதன வியாபாரம் செய்வதற்கு ஆதன வியாபார உரிமம் தேவை. பொதுவாக, ஆதன உரிமம் பெற்றாலும், ஒன்ராறியோவில் ஆதன வியாபாரம் செய்வதற்கு ஒன்ராறியோவில் இருக்கும் ஏதாவது ஓர் ஆதன வியாபார வாரியத்தில் (Real Estate Board) இணைந்துகொள்ள வேண்டும். உதாரணமாக TRREB (Toronto Regional Real Estate Board)உடன் இணைந்து கொண்டோர் ஒவ்வொரு ஜனவரி 01ஆம் திகதியும் தமது உரிமத்தைப் புதுப்பித்தல் வேண்டும்.

2024இன் ஆரம்பத்தில் தமது உரிமத்தைப் புதுப்பித்தோரின் எண்ணிக்கை குறைந்துள்ளது. உதாரணமாக, டிசெம்பர் 2023ஆம் ஆண்டில் முகவர்களின் எண்ணிக்கை 75,496ஆகக் காணப்பட்டது. ஆனால், ஜனவரி 2024ஆம் ஆண்டில் 6,496 (8%)ஆனவர்கள் தமது உரிமத்தைப் புதுப்பிப்பதனைத் தவிர்த்துக் கொண்டனர்.

| Real Estate Members | |
|---|---|
| TRREB (January 2024) | 69,000 |
| Ontario (December 2023) | 112,000 |
| Canadian Real estate Board (January 2024) | 166,000 |

எனினும், புதிதாக வருவோரையும் காணலாம்.

புதிதாக ஆதன வியாபாரத்திற்கு வருவோரில் பலர் வேறு ஒரு தொழிலையும் செய்வது வழக்கமாக உள்ளது.

வியாபாரத்தில் இருப்போர் தமது ஆதன உரிமத்தைப் புதுப்பிக்காமல் விடுவதற்கு முக்கிய காரணம், ஆதன வியாபாரத்தில் 2022ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஏற்பட்ட வியாபார முடக்கமும், விலை இறக்கமும் இதனால் வருமானத்தில் ஏற்பட்ட இறக்கமும் ஆகும்.

ரொறொன்ரோ ஆதன சம்மேளத்தில் 14,000 முகவர்கள் 12 மாதத்தில் ஒரு வியாபாரம் மட்டுமே செய்துள்ளதனை (TRREB) புள்ளி விபரம் காட்டுகின்றது. மேலும் 29,000 முகவர்கள் ஒன்றிற்கு மேற்பட்ட ஆதனப் பரிவர்த்தனைகளைச் (Real Estae Transaction) செய்துள்ளனர். இதிலிருந்து தெரிய வருவது ஏறக்குறைய 30,000 முகவர்கள் ஒரு வருடத்தில் ஓர் ஆதனப் பரிவர்த்தனை கூடச் செய்யவில்லை. எனினும் இந்தக் கணக்கில் வாடகைக்குப் பெற்றுக் கொடுப்பதோ, புதிதாக நிர்மாணம் செய்யப்படும் ஆதனங்களின் எண்ணிக்கை கணக்கில் எடுக்கப்படவில்லை. மேலும் 2024ஆம் ஆண்டு, புதிதாக நிர்மாணம் செய்யப்படும் வீடு மற்றும் மனைகளின் வியாபாரமும் மிகவும் மந்த நிலையிலேயே உள்ளது.

மேலுள்ள பல காரணங்களே ஏற்கனவே ஆதன வியாபாரத்தில் இருப்போர் தமது ஆதன வியாபார உரிமத்தை புதுப்பிக்காமல் விடுகின்றனர்.

ஆதன வியாபாரத்தில் ஆண்டு 2024 என்பதும் ஒரு சிறப்பான ஆண்டாக அமையவில்லை என்பது ஏற்றுக்கொள்ள வேண்டிய உண்மையாகும்.



கனடிய மத்திய வங்கி ஏற்கனவே 4 தடவை மொத்தமாக 1.25% வட்டி இறக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

எனினும், எதிர்பார்த்ததுபோல ஆதன வியாபாரம் நடைபெறவில்லை. மேலும் டிசெம்பர் 11, 2024இல் (இந்த வருடத்தில்) மேலும் ஒரு தடவைகூட உள்ளது.

அந்தக் கூட்டத்திலும் வட்டி வீத இறக்கத்தை எதிர்பார்க்கலாம். எனவே, 2025ஆம் ஆண்டின் இளவேனிற் காலத்தில் 2024ஆம் ஆண்டைவிட அதிக வியாபாரம் நிகழலாம் என ஆதன முகவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

அடமானக்கடனை செலுத்தாமை அதிகரிக்கின்றது.

CMHC (Canada Mortgage and Housing Corporation) நிறுவனத்தின் அறிக்கையின்படி ரொறொன்ரோ, வன்கூவர் நகரங்களில் அடமானக் கடனை செலுத்தாமல் விடுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பதாகத் தெரிய வருகின்றது.

கனடிய மத்திய வங்கி வட்டி வீதத்தைக் குறைத்தபோதிலும் மாதாந்தக் கொடுப்பனவு அதிகமாக இருப்பதே மாதாந்தக் கொடுப்பனவைத் தவிர்ப்பதற்குக் காரணமாகும். ரொறொன்ரோ, வன்கூவர் தவிர்த்த மற்றைய கனடிய நகரங்களில் அடமானக் கடன் செலுத்துதல் ஒழுங்காக இருப்பதாகத் தெரிகின்றது. மாதாந்தக் கொடுப்பனவு செலுத்துவதில் நெருக்கடியில் இருப்போர், விற்பனைக்காகச் சந்தைப் படுத்தினாலும், விற்பதிலும் சிரமம் இருப்பதனைக் காணலாம்.

அத்துடன் குளிர்கால, காலநிலையும் வருவதால் மேலும் வியாபாரம் குறையலாம் என எதிர்பார்க்கலாம். டிசெம்பர் 11, 2024இல் ஏற்படப்போகும் வட்டி இறக்கம், வியாபாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்துமா?






Vlambaram - December 01, 2024 _Vlambaram-Front 2024-11-30 4:18 PM Page 9



# ஜப்பானியருக்குத் தடைமுகாம்கள் – துரோகம் செய்ததா கனடாவும்?



T. சிவபாலு

இரண்டாம் உலக யுத்தத்தில் தனக்கே சேறு பூசிக்கொள்ளத்தக்கதாக அமெரிக்காவும் கனடாவும் நடந்து கொண்டனவா? என்னும் வினா வரலாற்றைப் புரட்டிப் பார்க்கும்போது சிந்திக்க வைக்கின்றது.



ஆனால் அதன் கறைபடிந்த வரலாற்றைச் சற்றுப் பின்நோக்கிப் பார்க்கின்றதா? என்பது ஐயத்துக்குரியதே. இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது ஜப்பானிய அரசாங்கம் பேள் (Pearl) துறைமுகத்தின் மீது குண்டுவீசித் தாக்கியதன் விளைவாக கனடாவில் நெடுங்காலமாக வாழ்ந்த கனடாவின் குடிமக்களான ஜப்பானியர்கள் படுபயங்கரமாகத் தாக்கப்பட்டனர். அமெரிக்காவில் வாழ்ந்த ஜப்பானியருக்கு எதிராக அப்போதைய அமெரிக்க அதிபர் ரூஸ்வெல்ட் பிறப்பித்த 9066 இலக்க நிறைவேற்று அதிகாரப் பணிப்புரையினால் 110,000 ஜப்பானியர்கள் தேசிய பாதுகாப்பு என்ற காரணத்திற்காக அவர்கள் இருந்த இல்லங்களிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு பாடசாலை செல்லும் சிறுவர்கள் என்றும் பார்க்காது முட்கம்பிகளுக்கு இடையே அடைத்து வைக்கப்பட்டனர். இந்த நிலை கனடாவையும் விட்டு வைக்கவில்லை.

கனடாவில் இருந்த வெள்ளை இனத்தவர்களின் கொடுமைகளுக்கு அப்பாவிகளான மீன் பிடித்தொழிலில் ஈடுபட்டிருந்த மேற்குக் கரையோர ஜப்பானியர்கள் ஆளாகினர். பேள் துறைமுகம் டிசெம்பர் 07, 1941 அன்று தாக்கப்பட்டதன் விளைவாக, பழிவாங்கும் நோக்கத்துடன் கனடாவிலும், அமெரிக்காவிலும் இருந்து பெருந்தொகையான ஜப்பானிய வம்சாவழியினரான, குடியுரிமை பெற்றிருந்தோர் நிறத்தைக் காட்டி ஒதுக்கப்பட்டதோடு பல்வேறு துன்புறுத்தல்கள், தாக்குதல்களுக்கு ஆளானதோடு அவர்கள் சிறைக் கைதிகளாக ஆண்கள் வேறு பெண்கள் வேறாக அடைக்கப்பட்டனர்.



NOTICE TO ALL JAPANESE PERSONS AND PERSONS OF JAPANESE RACIAL ORIGIN

TAKE NOTICE that under Orders Nos. 21, 22, 23 and 24 of the British Columbia Security Commission, the following areas were made prohibited areas to all persons of the Japanese race:—

| | |
|---|---|
| LULU ISLAND (including Steveston) | SAPPERTON |
| SEA ISLAND | BURQUITLAM |
| EBURNE | PORT MOODY |
| MARPOLE | IOCO |
| DISTRICT OF QUEENSBOROUGH | PORT COQUITLAM |
| CITY OF NEW WESTMINSTER | MAILLARDVILLE |
| | FRASER MILLS |

AND FURTHER TAKE NOTICE that any person of the Japanese race found within any of the said prohibited areas without a written permit from the British Columbia Security Commission or the Royal Canadian Mounted Police shall be liable to the penalties provided under Order in Council P.C. 1665.

AUSTIN C. TAYLOR,
Chairman,
British Columbia Security Commission

அமெரிக்காவில் இடம்பெற்றதைப்போன்றே கனடாவிலும் பிரிட்டிஸ் கொலம்பியாவின் கரையோரங்களில் வாழ்ந்துவந்த மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட ஜப்பானியர்கள் வெள்ளை இனத்தவர்களின் இனவெறிக்கு ஆளாகினர். 1902இல் அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப்பாகுபாட்டை எதிர்த்து மேற்கொள்ளப்பட்ட வழக்கில் பிரித்தானிய மேல்முறையீட்டு மன்றம் அவர்களைத் தகுதியற்றவர்கள் எனவும் வாக்களிக்கும் உரிமையற்றவர்கள் எனவும் தீர்ப்பளித்தது. வெள்ளை இனத்தவர்களின் பாகுபாடு 1907இல் உக்கிரமடைந்து சீன மற்றும் ஜப்பானிய குடிவரவாளர்களுக்கு எதிரான இனக்கலவரத்தை உண்டு பண்ணியது. அப்போதைய கனடாவின் பிரதமராக இருந்த வில்லியம் லியோன் மக்கன்சி கிங் ஜப்பானியர்களை முக்கியமான எதிரிகளாகவே நோக்கினார். இதனால் ஜப்பானியர்கள் கனடியக் குடிகள் என்னும் வரைபுக்குள் இருந்து ஒதுக்கிவைத்துள்ளார். ஆசிய இனத்தினர் மீதான இனப்பாகுபாடு இரண்டாம் உலக மகாயுத்தம் தொடங்கும்வரை தொடர்ந்தது. ஆனால் இரண்டாம் உலகயுத்தம் ஆரம்பித்தவேளை கனடா அரசாங்கம் ஜேர்மனிமீது போர் தொடுக்க உள்ளதை




அறிவித்தபோது இனவெறியாக மாறியது எனலாம். ஜப்பானியர்கள்மீது இனஒடுக்குமுறை மேற்கொள்ளப்பட்டது. அப்போதைய பிரதமராக இருந்த வில்லியம் லியோன் மக்கன்சி கிங் ஜப்பானியர்களை முக்கிய எதிரிகளாகக் கருதினார். இதனால் அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டது.

பேள் துறைமுகம் தாக்கப்பட்ட பின்னர் நீண்டகாலமாக ஜப்பானியர்கள்மீது கொண்டிருந்த வர்த்தக மற்றும் விவசாய, தொழில்துறைப் போட்டிகள் அவர்களை மேலும் பாதிப்படைய வைத்தது. வெள்ளை இனத்தவர்களான மீன்பிடித் தொழிலாளர்கள், வர்த்தகர்கள் மற்றும் விவசாயிகள் தங்களது நீண்டகால தொழிற்துறைப் போட்டியாளர்களான ஜப்பானியர்களுக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தினர். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவர்களை ஜப்பானிய உளவாளிகள் எனவும் ஜப்பானிய ஆதரவாளர்கள் என்றும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மேற்குக் கரையை ஜப்பானியர்களிடமிருந்து பாதுகாக்கும்படியும் வற்புறுத்தினர். பத்திரிகைகளும் வெள்ளையினத்தினருக்கு ஆதரவாக செய்திகளையும் கட்டுரைகளையும் வெளியிட்டன. வன்கூவர் சண் பத்திரிகை பிரதமரின் ஆலோசகர் ஜக் பிக்கேரள்கில் இற்கு எச்சரிக்கை செய்தது. "எங்களது வாசகர்களிடமிருந்து நாங்கள் மிகப் பாரதூரமான அழுத்தத்திற்கு ஆளாகி உள்ளோம். ஜப்பானியர்களுக்காக ஆலோசனைத் திட்டத்திற்கு பெரும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது" என்று எச்சரித்திருந்தது.

இரண்டாம் உலக யுத்தத்திற்கு முன்னர் வன்கூவரில் 22,096 வாழ்ந்த ஜப்பானியர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் குடியுரிமை பெற்ற அல்லது கனடாவில் பிறந்தவர்களாவர். இவர்கள் அனைவருமே வன்கூவரில் உள்ள கரையோரப் பிரதேசங்களிலிருந்து 160 கிலோமீற்றர் தொலைவில் உள்ள 10 சிறை முகாம்களில் அடைக்கப்பட்டனர். இவற்றுள் மூன்று வீதி முகாம்கள், இரண்டு போர்க்குற்றவாளிகளின் முகாம்கள், ஐந்து தன்முயற்சியால் உயிர்பிழைத்துக்கொள்ளும் முகாம்கள். இவர்களை கரையோரத்தைவிட்டு இரவோடு இரவாக அவர்களின் குடியிருப்புக்களில் இருந்து அகற்றி முகாம்களில் கொண்டு சென்று விட்டனர். ஆண்கள் வேறாகவும் பெண்கள் வேறாகவும் சிறார்கள் வேறாகவும் சிறை வைக்கப்பட்டனர். தப்பித் தவறியும் இந்தத் தடைசெய்யப்பட்ட பிரதேசத்திற்குள் காணப்பட்ட ஜப்பானியர்கள் எரித்துக் கொல்லப்பட்டனர். இரண்டாம் பேள் துறைமுகத் தாக்குதலுக்கு எல்லா ஜப்பானியர்களும் காரணம் என்னும் தோரணையில் இனப் பாகுபாடு தலைதூக்கியது. பிறிட்டிஸ் கொலம்பிய மக்கள் ஜப்பானியர்களிடம் இருந்து தமக்குப் பாதுகாப்பு வேண்டும். அவர்களைத் தங்கள் பிரதேசத்திலிருக்க அனுமதிக்கலாகாது எனப் போர்க்கொடி உயர்த்தியதன் காரணமாக பிரதமர் மக்கன்சி அவர்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காக ஜப்பானியர்களுக்கு எதிராகச் செயற்பட்டார் என்னும் குற்றச்சாட்டினை பல வரலாற்று ஆசிரியர்களும் கூறிவருகின்றனர். இதனால் எல்லா ஜப்பானியன் அல்லது ஜப்பானிய இனத்தில் பிறந்தோருக்கு பிரிட்டிஸ் கொலம்பிய பாதுகாப்பு ஆணைக்குழுவின் தலைவர் 'ஒஸ்ரன்' சி. ரெயிலர்' என்பவரால் பி.சி. 1665 இலக்கச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டிருந்தது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் ஜப்பானியர்களுக்குத் தடைவிதிக்கப்பட்டிருந்தது.

யுத்தத்தின் காரணமாகத் தோட்டங்களில் வேலை செய்வதற்கான பணியாட்களின் தொகை மிகவும் பற்றாக்குறையாகக் காணப்பட்டது. இதனால் கரும்புத் தோட்டங்கள் போன்றவற்றில் பணியாற்ற முகாம்களிலிருந்து திருமணம் செய்து கொண்ட ஜப்பானிய ஆண்கள் அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் அடிமைகளாகவே கருதப்பட்டனர்.

ஜப்பானியர்கள் தாம் செய்யாத குற்றத்திற்காகத் தண்டனை பெற்றுக்கொண்டனர். ஜப்பானியர்கள் வெள்ளை இனத்தவர்கள்

தொடர்ச்சி 20ஆம் பக்கம்

Get in touch for your perfect place!

PUSHPA KANAGARAJAH
SALES REPRESENTATIVE

DIR: 647.786.3436
pushpakana33@gmail.com

HOMELIFE
HIGHER STANDARDS
HOMELIFE/GTA REALTY INC.,
BROKERAGE INDEPENDENTLY OWNED & OPERATED

5215 Finch Ave. E #203, Toronto, ON. M1S 0C2
B: 416.321.6969 F: 416.321.6963 5215



தமிழர் பாரம்பரிய பலகாரங்கள்

விசேட வைபவங்களுக்கான லட்டு, கேசரி, தொதல், அச்சுப் பலகாரம், அரியதரம், பயத்தம் பலகாரம் போன்ற பலகார வகைகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

778.846.5460/416.287.8167



# நானிலம் போற்றும் நட்பு - 57



– அகணி –
authorakani@gmail.com

இப்பொழுது திரிகடுகம் நூலின் எழுபத்து ஏழாம் செய்யுளைக் கவனிப்போம்.

“கயவரைக் கையிகந்து வாழ்தல், நயவரை
நள் இருளும் கைவிடா நட்டு ஒழுகல், தெள்ளி
வடுவான வாராமல் காத்தல், - இம் மூன்றும்
குடி மாசு இலார்க்கே உள.”

‘நயவர்’ என்றால் ‘நீதியுடையவர்’ என்று பொருள் கொள்ளுமாறு உரையாசிரியர்கள் விளக்கம் தந்துள்ளனர்.

இந்தச் செய்யுளிற்கான பொருள் “கீழ்மக்களைச் சேராமல் வாழ்தலும், நீதியுடையவரை நட்புச் செய்து கொள்ளுதலும், தனக்குப் பழி வரும் செயல்களைச் செய்யாதிருத்தலும், நல்லவர் செய்கைகள் ஆகும்.” என்று உரையாசிரியர்கள் விளக்கம் கொடுத்துள்ளனர்.

இந்தச் செய்யுளில் புலவர் நல்லவர் செய்கைகளாகக் குறிப்பிட்ட நீதியுடையவரை நட்புச் செய்து கொள்ளுதலையும், தனக்குப் பழிவரும் செய்கைகளைச் செய்யாதிருத்தலையும் எக்காலத்தும் பொருந்தும் அறிவுரைகளாக எடுத்துக் கொள்ளலாம். கீழ்மக்களைச் சேராமல் வாழ்தலை நல்லவர் செய்கைகள் என்ற புலவரின் கூற்று விவாதத்துக்குரிய விடயம். கீழ்மக்கள் என்று புலவர் குறிப்பிட்டமை தீய செயல்களைச் செய்பவர்களை என்றால் எக்காலத்தும் பொருந்தும் விடயமாக ஏற்றுக்கொள்ளலாம்.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் நூற்றிமுப்பத்திஎட்டாம் பாடலைக் கவனிப்போம்.

இது கொல்லன் அழிசி என்பவர் பாடிய செய்யுள், தோழி கூற்றாக உள்ளது. “நேற்றிரவு நாங்கள் தலைவனை எதிர்நோக்கித் தூங்காமல் இருந்தோம். நொச்சிமலர் உதிரும் ஓசைகூட எங்கள் காதில் விழுந்தது. தலைவன் வந்திருந்தால் நாங்கள் அதை உணராமல் இருந்திருக்க மாட்டோம்” என்று கூறினாள். இது குறிஞ்சித்திணை சார்ந்தது. தலைவியைச் சந்திப்பதற்காக இரவிலே வருவது தலைவனுடைய வழக்கம். ஒரு நாள் அவன் தலைவியைச் சந்திக்க முடியாமல் திரும்பி விட்டான். தலைவன் வருவதற்கு முன்பே தலைவி அவ்விடத்திற்குப் போனாள். தலைவனைக் காணவில்லை என்று திரும்பிவிட்டாள்.

அடுத்த நாள் அதே இடத்தில் தலைவன் வந்து நின்றான். தலைவியின் வீட்டுக்குப் பக்கத்திலே ஓர் ஏழிலைப் பாலை மரம். அதற்கு அப்பால் நொச்சிச் செடிகள் அடர்ந்த வேலி. அந்த வேலியின் பக்கந்தான் தலைவனும் தலைவியும் இரவிலே சந்திக்கும் இடம். அவ்விடத்திலே தலைவன் வந்து நிற்பதைத் தோழி பார்த்து விட்டாள். அவள், “நேற்றுச் சந்திக்க முடியாமற் போனதற்குக் காரணம் எங்கள் குற்றம் அன்று. நாங்கள் இரவு முழுவதும் தலைவனை எதிர்பார்த்துக் கண்ணுறங்காமல் இருந்தோம். தலைவனால் உண்டான தவறுதான் தலைவியைச் சந்திக்க முடியாமற் போனதற்குக் காரணம்” என்று தலைவனுடைய காதிலே விழும்படி கூறினாள். இந்த நிகழ்ச்சியைக் கூறுவதே இச்செய்யுள்.

“கொன்ஊர் துஞ்சினும் யாம் துஞ்சலமே.
எம்இல் அயலது ஏழில், உம்பர்
மயில் அடிஇலைய மாக்குரல் நொச்சி.
அணிமிகு மென்கொம்பு ஊழ்த்த
மணிமருள் பூவின் பாடு நனி கேட்டே.”

இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம்.
“ஏழிலைப் பாலை மரம் ஒன்று எமது இல்லத்தின் அருகிலே நிற்கின்றது. அதற்கு அப்பால் நொச்சிச் செடிகள், அடர்ந்த வேலி இருக்கின்றது. அந்த நொச்சியின் இலைகள் மயிலின் அடியைப் போன்றவை. அச்செடிகளிலே கருமையான பூங்கொத்துகள் நிறைந்திருக்கின்றன. இத்தகைய பூங்கொத்துகளையுடைய அழகிய கிளைகள், நீலமாணிக்கம் போன்ற மலர்களைச் சிந்திக் கொண்டேயிருக்கின்றன. அம்மலர்கள் விழும் ஓசை எங்கள் காதிலே நன்றாக விழுந்தன. அதனால் பெருமையுள்ள இவ்வூரில் உள்ளவர்கள் அனைவரும் உறங்கினாலும் நாங்கள் மட்டும் தூங்கவில்லை. தலைவர் வருகையை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தோம்.”

“நேற்றிரவு நாங்கள் உறங்கவேயில்லை. தலைவரை எதிர்பார்த்து விழித்திருந்தோம்” என்று தோழி தலைவன் காதில் விழும்படி கூறுவதாக உள்ளது.

இப்பொழுது குறுந்தொகையில்வரும் நூற்றிமுப்பத்திஒன்பதாம் பாடலைக் கவனிப்போம்.

ஒக்கூர் மாசாத்தியார் என்னும் புலவர் பாடிய பாட்டு. இவர் புலமையிற் சிறந்த பெண்மணி. பரத்தையர் வீட்டுக்குச் சென்ற தலைவன் மீண்டும் தலைவியைத் தேடி வந்தான். அப்பொழுது தோழி அவனது உறுதியற்ற நிலையை எடுத்துரைத்தாள். தோழி கூற்றாக உள்ளது. இது மருதத்திணை சார்ந்தது.

தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்தான். பரத்தையர் வீட்டிலே போய் வாழ்ந்தான். அங்கு சலித்துப்போக தலைவியோடு சேர்ந்து வாழ்வதே சிறந்த வாழ்வு என்பதை உணர்ந்தான்.

தலைவியைக் காணவந்த தலைவன் முதலில் தோழியைக் கண்டான். தன் குற்றத்தை மன்னிக்க வேண்டும், தலைவியுடன் தன்னைச் சேர்த்து வைக்கவேண்டும் என்று வேண்டிக் கொண்டான்.

தலைவனுடைய வேண்டுகோளைத் தோழி மறுத்துரைப்பதுதான் இப்பாடல்.




“மனைஉறை கோழிக் குறுங்கால் பேடை,
வேலி வெருகினம் மாலை உற்றெனப்
புகும் இடன் அறியாது, தொகுபுஉடன் குழீஇய
பைதல் பிள்ளைக் கிளைபயிர்ந்தாஅங்கு
இன்னாது இசைக்கும் அம்பலொடு
வாரல்!வாழியர்! ஐய எம் தெருவே.”

இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம்.
“மனையிலே வளரும் பெட்டைக் கோழி வேலியோரத்திலே மேய்ந்து கொண்டிருக்கின்றது. அதன் குஞ்சுகள் அங்குமிங்குமாக அலைந்து திரிந்துகொண்டிருக்கின்றன. பொழுது போய் மாலைக் காலம் வந்துவிட்டது. அப்பொழுது காட்டுப் பூனையின் கூட்டங்கள் அங்கே வந்தன. அவற்றைக் கண்டவுடன் பெட்டைக்கோழி நடுக்கமடைந்து விட்டது. எங்கே போவதென்று அதற்குப் புரியவில்லை. தன்னுடன் வந்து ஒன்றுசேரும் பொருட்டுத் தன் குஞ்சுகளைக் கூவி அழைத்துக் கொண்டிருந்தது. நீர் இங்கே வந்திருப்பதைப் பார்த்தவுடன் இந்தக் காட்சி என் நினைவுக்கு வருகின்றது. நீர் இந்தத் தெருவிலே நிற்பதை உம்முடன் கூடியிருந்த பரத்தையர்கள் பார்த்தால் அந்தப் பெட்டைக் கோழியைப் போல ஓலமிடுவர்.

“எம்மிடமிருந்து பிரிந்துபோன தலைவனை அவனுடைய தலைவி ஏற்றுக்கொண்டு தன்னிடமே வைத்துக் கொள்ளுவாளோ” என்று அந்தப் பரத்தையர்கள் அஞ்சுவர். அவ்வச்சம் காரணமாகப் பழிச்சொற்களையும் பரப்புவர். ஆதலால் நீர் நாங்கள் இருக்கும் இந்தத் தெருப்பக்கமே வரவேண்டாம். நீர் உம்முடைய விருப்பப்படி இன்பமாக வாழ்வீராக!.”

“எங்கள் தெருப்பக்கம் வராதே. பரத்தையர்கள் பழித்துரைப்பார்கள்.” என்று தோழி தலைவனுக்குக் கூறுகிறாள்.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் நூற்றிநாற்பத்திமூன்றாம் பாடலைக் கவனிப்போம்.

இது மதுரைக் கணக்காயன் மகன் நக்கீரன் என்னும் புலவர் பாடிய பாட்டு. பொருள் தேடப் பிரிந்த தலைவனை நினைத்து வருந்திய தலைவிக்குத் தோழியுரைத்த ஆறுதல் மொழி. தோழி கூற்றாக உள்ளது. இது குறிஞ்சித்திணை சார்ந்தது.

தலைவன் பிரிவால் வருந்துகின்றாள் தலைவி. அவளுக்குத் தோழி ஆறுதல் கூறுகின்றாள். தலைவனுடைய உயர்ந்த குணத்தை எடுத்துக் காட்டுகின்றாள்.

“அழியல் ஆயிழை அழிவு பெரிது உடையன்,
பழியும் அஞ்சும், பயம் மலை நாடன்
நில்லாமையே நிலையிற்று ஆதலின்
நல் இசைவேட்ட நயன் உடை நெஞ்சின்
கடப்பாட்டாளன் உடைப் பொருள் போலத்
தங்குதற்கு உரியது அன்று, நின்
அம்கலுழ் மேனிப் பாஅய பசப்பே

இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம்.
“தலைவியே நீ வருந்த வேண்டாம் நமது தலைவன் நல்ல பயனைத் தரும் மலைநாட்டின் தலைவன். மிகவும் இளகிய மனம் படைத்தவன் பிறர் துன்பப்பட விடமாட்டான். தன்னைப் பிறர் பழிக்கக் கூடாது என்பதிலே கவலையுள்ளவன் பிறர் பழிக்கத் தக்க சொற்களைச் செய்வதற்குத் துணியவே மாட்டான் பயப்படுவான்.

செல்வம் நிலைக்காது இதுதான் அழியாத உண்மை. இந்த உண்மையை உணர்ந்தவன் ‘எப்பொழுதும் நிலைத்திருப்பது புகழ் ஒன்றுதான்,’ என்பதை உணர்வான். ஆதலால் நீதி நிறைந்த நெஞ்சுள்ளவன், தான் செய்யவேண்டிய கடமையை மறக்க மாட்டான். தன் செல்வம் முழுவதையும் அறநெறியிலே அழிப்பான். அறத்திலே செலவிடுகின்றவனுடைய செல்வம் அழிவதுபோல உனது மேனியிலே படர்ந்திருக்கும் பசலை மறைந்து போகும். உன் அழகு மட்டும் புகழ்போல் மறையாமல் நிற்கும். இத்தகைய மகிழ்ச்சியுண்டாகும்படி நமது தலைவன் விரைவில் மீண்டு வருவார். ஆதலால் நீ வருந்த வேண்டாம்!”

